
# ஆத்ம ஜோதி



வெள்ளியமலை

ஸ்ரீமத் அம்பானந்த சுவாமிகள்



# ★ ஆத்ம ஜோதி ★

[ ஓர் ஆத்மீக மாத வெளியீடு ]

**எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்**
**எல்லா உடலும் இறைவன் ஆலயமே.**—சுத்தானந்தர்.


சோதி 12 | சார்வரி ஹு ஐப்பசி மீ 1-ந் உ (17-10-60) | சுடர் 12


## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | பேரின்பத் தெள்ளமுது | 353 |
| 2. | ஸ்ரீ ராமகிருஷ்ணர் செய்த பிரார்த்தனை | 354 |
| 3. | சக்தியின் இரகசியம் | 355 |
| 4. | சாகவிடு | 357 |
| 5. | வெள்ளிமலை - ஸ்ரீமத் அம்பானந்த சுவாமிகள் | 358 |
| 6. | வாழ்வில் வெற்றி பெறும் வழி | 363 |
| 7. | சுத்தானந்தரின் கடிதங்கள் | 366 |
| 8. | எனது யப்பான் தேசத்து அனுபவங்கள் | 371 |
| 9. | உருகுதே உள்ளம் பெருகுதே கண்ணீர் | 379 |
| 10. | ரிஷிகேசம் தெய்வீக வாழ்க்கைச் சங்க வெள்ளி விழா | 384 |


## ஆத்ம ஜோதி சந்தா விபரம்.


ஆயுள் சந்தா ரூ. 75-00, வருடச் சந்தா ரூ. 3-00

தனிப்பிரதி சதம் 30.

கௌரவ ஆசிரியர்: க. இராமச்சந்திரன்.

பதிப்பாசிரியர்; நா. முத்தையா,

"ஆத்ம ஜோதி நிலையம்" நாவலப்பிட்டி. (சிலோன்.)

# நேயர்களுக்கு ஓர் நற்செய்தி.

இம்மாதச் சுடருடன் சோதிக்குப் பன்னிரண்டு ஆண்டுகள் நிறைவுறுகின்றன. மனிதனுடைய உடல் வளர்ச்சியிலும் சரி, அகவளர்ச்சியிலும் சரி பன்னிரண்டு வருடங்களுக்கொருமுறை மாற்றம் ஏற்படுவதை யாரும் அவதானித்தறியலாம். பருவகாலத்திலேயே இத்தகைய மாற்றம் உண்டு. இது இயற்கையின் நியதி.

ஆத்ம ஜோதியைப் பொறுத்தவரையில் எத்தகைய மாற்றம் நிகழலாம் என்றுதானே கேட்கின்றீர்கள்! ஆத்மஜோதியின் பதின்மூன்றாவது பிறந்த தினத்தோடு **ஆத்ம ஜோதிக்கெனத் தனியாக ஒரு அச்சகம்** தோன்ற இருப்பதை மிக மகிழ்வுடன் அறியத்தருகின்றோம். பல அன்பர்களுடைய ஆதரவோடும், முயற்சியோடும், ஆசியோடும் ஆரம்பமாகின்றது. ஆத்மஜோதி நிலையத்திலேயே தனியாக ஒரு அச்சகம் நாட்டப்பெறுகின்றது. இதுபற்றி ஒரு அன்பரிடம் கூறினேன். உடனே நூறு ரூபா நோட்டு ஒன்றை எடுத்து மகிழ்வுடன் கொடுத்து இது தேவையான அளவுக்குப்பெருகும் என்று ஆசி கூறினார்கள்.

**ஆத்ம ஜோதி அச்சகம்** முழுக்க முழுக்கப் பொதுப் பணிக்கென்றே அர்ப்பணிக்கப் படுகின்றது. ஒவ்வொரு ஆத்ம ஜோதி அன்பருடைய ஆதரவும் ஆசியும் ஜோதி அச்சகத்திற்குக் கிடைக்கவேண்டும் என்றே பெரிதும் விரும்புகின்றோம். அன்பர்கள் அனைவரும் தங்கள் தங்கள் சந்தாவை அனுப்பிவைப்பதோடு, ஆதரவையும் ஆசியையும் அளிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

**ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி (சிலோன்)**

# பேரின்பத் தெள்ளமுது

(மகரிஷி சுத்தானந்தர்)

35 தத்வமஸி யென்பர் சிலர்; தானடங்கிடவே
சமாதான மென்பர் சிலபேர்,
தானின்றி வேறில்லை யென்பர் சிலர் சாட்சியாந்
தனிநிலைய தென்பர் சிலபேர்
சுத்தநிர்க் குணமென்பர் துரியநிலை யென்னுவார்
சூனியம தென்பர் சிலபேர்
சொன்மனமடங்காத பொருளென்பர் உலகெலாந்
தோன்றுவது மாயை யென்பர்,
சத்தென்பர், சித்தென்பர், தற்போத மற்றவழி
சார்ந்து தித்திக்கு மென்பார்,
தந்தைதாய் காதலன் தனயனென் றுருகுவார்
சங்கீர்த்த னஞ்செய்கு வார்
அத்துவித வத்துதா னதுவாய் உணர்வார்கள்
அதுவின்றி யாது முணரார்
அதுவென்று மிதுவென்றும் அவளென்றும் அவனென்றும்
அவையென்று மானபரமே;

---

36 ஆதிவேதஞ் சொலும் அத்யாத்ம தீரமும்
ஆனந்த வாழ்வும் வேண்டும்
அரியசங் கரர்சொலும் தன்னறிவு மிகவேண்டும்
அப்பர் சொலும் அன்பு வேண்டும்
கீதைசொலும்நிஷ்காம்ய கர்மயோகம் வேண்டும்
கிறிஸ்துவின் பொறுமை வேண்டும்.
கிருஷ்ணசை தன்யரின் பக்திப்பரவசம் வேண்டும்
கேடிலா உறுதி வேண்டும்.
பேதமறு வள்ளலின் பெரிய சமரசம் வேண்டும்.
பேய் மனம் அடங்க வேண்டும்
பிரியாத சிவசக்திபோலாண்மைபெண்மையுடன்
பேரின்பம் உண்ண வேண்டும்
சாதனம தாஞ் சரியை கிரியையோகம் ஞான
சன்மார்க்க சித்தி வேண்டும்
தன்மயச் சின்மயப் பன்மயத் தெய்வமே.
சச்சிதானந்த பரமே!

# ஸ்ரீராமகிருஷ்ணர் செய்த பிரார்த்தனை

(நிலைமண்டில ஆசிரியப்பா)

தாயே உன்றன் திருவடி மலர்கள்
சேயேன் சரணுய் வந்தேன் இன்றே!
உன்னைத் தேடி யுய்யா வண்ணம்
என்னை ஈர்க்கும் எந்தப் பொருளும்
என்பாற் சேரா வண்ணம் இன்றே!
முன்னின் றருளாய் மாதா நீயே!
சற்றும் வேண்டேன் சிற்றின் பங்கள்
பற்றேன் பேரும் பன்மா சித்தியும்
அன்பு ஒன்றே அடியேன் விழைந்தேன்
தன்னலம் விழையா தூய அன்பு
மறியும் உலகிடை மயக்கும் பொருள்கள்
சிறிதும் விரும்பாச் சீரிய அன்பு
ஆழியை நிகர்த்த ஆன்மா வுக்குள்
ஆழத் தேனின் றூறும் அன்பு
மாசற் றோங்கும் மேலாம் அன்பு
ஏசற் றொளிரும் இனிய அன்பு
ஒன்றே சேயேன் உன்பாற் கேட்டேன்
இன்றே தாராய் என்றன் அன்னுய்
மாயா இருளால் மயக்கங் கொண்டு
காயுங் காம காஞ்சன வலையுட்
பட்டுன் பாத பங்கய மறவா
நிட்டை தந்து நீதான் காவாய்!
பெண்ணைப் பொன்னைப் பற்றுத் தூய்மை
திண்ணந் தாராய் தாயே தேவி
உன்னை யன்றி ஓர்கதி உலகில்
உன்றன் சேய்க்கு முண்டோ சொல்லாய்?
உன்றிருப் பெயர்நா னேதவும் அறியேன்
நின்னைச் சாரும் ஞானமும் இல்லை
ஆத லாலுன் பாதாம் புயத்தில்
காதல் தந்து காப்பதுன் கடனே.

# சக்தியின் இரகசியம்.

(ஆசிரியர்)

★

சிறிய ஆலம் விதையினுள்ளே பெரிய ஆலமரம் அடங்கிக் கிடக்கின்றது. இது படைப்பின் இரகசியம். மனிதன் தன்னுள் அளவுகடந்த பலத்தின் விதையை வைத்திருக்கிறான். தன்னுள் இருக்கும் பலத்தை அறியாதவனாய் வாழ்கின்றான். இந்த விதையே வானமண்டலங்களுக்கும் உலகங்களுக்கும் சகல ஜீவகோடிகளுக்கும் மூலம்.

இந்த விதையிலிருந்துதான், தான் தோன்றியுள்ளான் என்பதை அறிபவனே மனிதன். இது அழிவற்ற விதை. இதிலிருந்து ஒளியும் பலமும் பாய்கின்றன. இவ்வுண்மையை யறிந்தவன் ஒளியும், பலமும் தன்னுள்ளே செல்லும் வாய்க்காலைத் திறந்துவிடுகின்றான். இதனால் அவனுடைய பலவீனம் எல்லாம் இருந்த இடந்தெரியாமல் மாண்டு மடிந்துபோகின்றன. அறியாமை ஒழிந்து உள்ளம் தெய்வீக அறிவால் ஒளி பெறுகின்றது.

சந்தேகம் மனிதனை வளர விடாது தடுக்கும் நோயாகும். அந்நோய் நீங்கிய இடத்தில்தான் அளவற்ற நம்பிக்கை உண்டாகும். நம்பிக்கை உண்டானால்தான் முயற்சியின் பயன் கைகூடும். நம்பிக்கைதோன்றிய விடத்தே வருத்தமும் துன்பமும் தலைகாட்டுவதில்லை. வருத்தமும் துன்பமும் படிப்படியாய் மறையத் தொடங்கச் சாந்தியும் இன்பமும் உதிக்கின்றன. உள்ளே பெறும் சாந்தி முகத்தின் மூலமாக வெளியேயும் வீசுகின்றது. உள்ளத்திலே உண்மை ஒளி உண்டாக வாக்கினிலும் உண்மை ஒளி பிரதிபலிக்கின்றது. சாந்தியற்றிருப்பவனைச் சாந்தி யின்பத்தை யநுபவிக்கச் செய்கின்றது.

வாழ்க்கைக்கு ஆறுதல் வேண்டும். அவ்வாறுதல் உள்ளேயிருந்து தோன்ற வேண்டும். அதுவே தெய்வ ஒளியைப் பரப்பும் சோதியுமாகும். இந்நிலையடைந்த மனிதன் தனக்காக வாழ்வதில்லை. தனக்காகச் சாப்பிடுவதில்லை. தனக்காக

எதுவுமே செய்வதில்லை. பிறருக்காகவே வாழ்கின்றான். பிறருக்காகவே உண்டுடுத்து உயிரைப் பாதுகாக்கின்றான். எந்த நிமிஷமும் சோம்பலாயிருப்பதில்லை. வேலையற்றிருப்பதில்லை. மனித வர்க்கத்தை உண்மை, ஒளி என்ற வழிகளிலே கொண்டு செல்கின்றான். தான் எங்கு சென்றாலும் எல்லோர் மேலும் சமமாக அன்பு, கருணை என்னுங் கதிர்களைப் பொழிகின்றான்.

தன் இனிய சுபாவத்தாலும், புன்னகையாலும், களங்கமற்ற தன்மையாலும் தன்னிடம் வருவார் அனைவரையும் வசீகரிக்கின்றான். அவனுள்ளிருக்கும் ஏதோ ஒன்று வருவோருக்குச் சாந்தியை அளிக்கின்றது. அந்த இன்பத்திலே வந்த கவலையை மறந்து சென்று மீண்டும் வீட்டிலே சென்று கவலையை நினைவு கூருகின்றனர். அவன் வாழ்வு எல்லையற்ற வாழ்வோடு தொடர்புற்றதால் அவனுடைய பலமும் எல்லையற்றதாகும். பூரணத்திலிருந்து தோன்றியதும் பூரணமே. இவ்வுண்மையை அறிபவன் மக்கள் மனதை ஆட்கொள்ளுகின்றான். சூரியனை எதிர்நோக்கி ஓடும் மனிதனை நிழல் பின் தொடர்கின்றது. அநுகூலமும் வெற்றியும் இத்தகையவனைப் பின் தொடர்கின்றன. உலகில் பெறற்கரும்பேறு ஒன்று உண்டென்றால் அது ஆத்மீக அறிவாகும். இதனை அறிவதற்காகத் தேவேந்திரன் நூற்றொருவருட காலம் பிரஜா பதியினிடம் குருகுலவாசம் செய்ததாக உபநிடதங்கள் கூறுகின்றன.

ஆத்மீக உண்மையை அறிந்தவர்களே உலகில் எல்லாவற்றையும் அறிந்தவர்களாகின்றார்கள். அவர்களின் வாழ்வு எளியது. அவர்களின் வழிகள் இன்பமானவை; விளையாட்டானவை. அகந்தையின் அடையாளத்திற்கே இடமில்லை. அவர்களுக்குரிய ஆசை ஒன்றே ஒன்றுதான். 'நான்பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்' என்பதே அவர்களது சுலோகமாகும். ஒவ்வொரு மனிதனும் இந்தப் பெரும்பேற்றை தன் பிறப்புரிமையாக அடைய முடியும். முதலில் மனிதன் தன் அழியா மூலத்தை மாத்திரம் அறியட்டும். இந்த மூலத்தோடு தன் ஐக்கியத்தையும் ஒருமையையும் அறியட்டும். இந்த மூலம் தெய்வீகமானது. இந்த மூலமே உயர்ந்த இறைவன். இதன்பின் வலிமை, பலம், வெற்றி, சாந்தி, அறிவு இன்பமெல்லாம் என்றும் அவனுடையனவே. அவன் தன் வாழ்வின் நியதியை நிறைவேற்றிவிட்டவனாவான். ஆறு எல்லையற்ற கடலையடைந்துவிடும். ஒருதுளி நீர் நித்திய ஆழியுள் கலந்து விடும். இதுவே சக்தியின் இரகசியமாகும்.

ஓம் சக்தி

# சாகவிடு

தாயே, ஓம் சக்தி, அருள்
தந்திடுவாய் அம்மா!
தயவிலையேல் தமியனைநீ
சாகவிடு சும்மா!
ஓயாத துயர்நெருப்பில்
உழற்றுவதேன் அம்மா?
உதவாத பிள்ளையெனில்
வதைப்பதுவோ சும்மா?

1.

இப்பிறப்பில் கொடுவினைகள்
ஏது செய்தேன் அம்மா?
ஏனிந்தப் பிணிதுயரம்
எனைவருத்துதம்மா?
தப்பிதங்கள் கோடிமுறை
சேய்புரிந்த போதும்,
தாய்பொறுத்துக் காத்தருளல்
தரணிமுறை யம்மா!

2.

உனையன்றித் துயரையெவர்க்
குரைத்திடுவேன் அம்மா?
உயர்நண்பர் எனினுமவர்
உணர்வாரோ சும்மா?
அனைத்துயிர்க்கும் உயிரான
அருந்துணைநீ; யம்மா
அபலைநிலை கண்டிரங்கி
அருள்புரிவா யம்மா! 3.

### வெள்ளிமலை

# ஸ்ரீமத் அம்பானந்த சுவாமிகள்

### (மதுரானந்தா, ஈத்தாமொழி)

சேரநாடெனும் கேரளத்தின் இதயம்போல் மிளிர்வது மாவேலிக்கரை என்ற பழமை பெருமை வாய்ந்த பதி. அதன் வடபாலுள்ள திருக்கண்டியூர் என்னும் மகா (சிவ) க்ஷேத்திரத்தின் அண்மையில் கைமள் வீடு (கைம்மூடு) என்ற பொருட் செல்வமும் அருட் செல்வமும் மிக்க வேளாளர் குடியொன்றுண்டு. அப்பெருங் குலத்தின் கொழுந்தாக கொல்லமாண்டு 1049. ஆனித்திங்கள் 26-ஆம் நாள் பரணி மீனில் சற்குரு அம்பானந்த சுவாமிகள் திருவவதாரம் செய்தார். திருவிதாங்கூர் அரசாங்கத்தில் பலகாலம் நேர்மையுடனும் திறமையுடனும் நீதிபதியாகப் பணியாற்றிய சீலம்மிகு **சொக்கலிங்கம்பிள்ளை அவர்களும்**, திருமகளனைய **இலட்சுமி அம்மையாரும்** தவஞ்செய்து பெற்ற தலைமகவுதான் நம் சுவாமிகள். அடிகளாரது பிள்ளைத் திருநாமம் மதுரநாயகம்பிள்ளை என்பதாகும். எல்லோரும் இவரை "**மதுரர்**" என்று அழைத்து வந்தனர். பெயருக்குத் தகுந்தாற்போல் இளமை முதலே இவரது வடிவமும் மதுரம்; குணமும் மதுரம். பள்ளியில் தலைமாணாக்கன். கணித நூலில் மேதை. டென்னிஸ் பந்து விளையாட்டில் வித்தகர். பள்ளித் தோழர்களின் மதிப்பிற்கும் ஆசிரியர்களின் ஆசிக்கும் ஆளானார். திருவனந்தபுரம் ஸயன்ஸ் கல்லூரியில் இண்டர்மீடியட் படித்துப் பின் சென்னையில் பொறியியல் பட்டப் பரீட்சைக்குப் படிக்கச் சென்றார். சென்னையில் மாணவனாயிருக்கும் போது, உலகப் புகழ்பெற்று விளங்கிய **விவேகானந்த சுவாமிஜீ**, தனது வீர முழக்கத்தால் மேலை நாட்டிலே வேதாந்தக்கொடி கட்டிவிட்டு 1897 பிப்ரவரி மாதம் முதல் வாரத்தில் சென்னை வந்து சேர்ந்தார்கள். சுவாமிஜியை ரதத்தில் ஏற்றி சென்னை மாநகரின் அறிஞர்களும், மாணவர்களும் சேர்ந்து இழுத்துச் சென்ற திருவுலாக் காட்சியை நமது அடிகளார் கண்ணாரக் கண்டார்கள். அப்போது சிவபெருமானின் அவதாரமாகிய

ஸ்ரீமத் விவேகானந்தரின் திருமேனி ஒரு தெய்வீகப் பொலிவுற்று விளங்கியதையும், அவரது திருமுகத்தைச்சுற்றி பொன்னொளி வட்டம் (halo) ஒன்று மிளிர்ந்ததையுங் கண்டு, பரவசமுற்றார். பின் சென்னையில் விவேகானந்தர் ஆற்றிய சொற்பொழிவுகளை யெல்லாம் நம் அடிகளார் கேட்டார். அப்போது அவரது நிலை,

**"முன்னை அவனுடைய நாமங் கேட்டாள்**
**மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்**
**பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்**
**பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்**
**அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்**
**அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தை**
**தன்னை மறந்தாள் தன்னாமங் கெட்டாள்**
**தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே."**

என்ற தேவாரத் திருவாக்கின்படியே ஆயிற்று. படிப்பிலுள்ள கவனமெல்லாம் பகவன் மேலானது. வீட்டுக்காரர்களுக்குப் பயந்து படிப்பது போல் பாசாங்கு செய்தார். தேர்தலில் தோல்வியுற்றார்.

அந்நாளில் நிறுவப்பட்ட மயிலாப்பூர் ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்துத் தலைவரும், ஸ்ரீமத் விவேகானந்தரின் சகோதரத் துறவியுமான **ஸ்ரீமத் ராமகிருஷ்ணானந்த சுவாமிகள்** சிந்தாதிரிப் பேட்டையில் நடத்தி வந்த வேதாந்த வகுப்புகளுக்குச் சென்று அவரது அலாதியான அருளாசிக்குப் பாத்திரமானார்.

இதற்கிடையில் தன் பெற்றோர்கள் இறந்துபோகவே ஏழு சகோதரர்களைக்கொண்ட குடும்ப பாரம் சுவாமிகள்மேல் வந்தது. துறவியாக வெளிக்கிளம்ப எண்ணியவரை சின்னஞ்சிறு தம்பியர்களின் நிலை தடுத்தது. தம்பியருக்காக தனது முப்பதாவது வயதில் மாங்நார் நாயர் சமாஜம் உயர்நிலைப் பள்ளியில் கணித ஆசிரியர் வேலையிலமர்ந்தார். ஓர் சிறந்த ஆசிரியர் என்ற முறையில் மாணவர்களுடையவும் துணை ஆசிரியர்களுடையவும் பேரன்பிற்குப் பாத்திரமானார். மாணவர்களைத் தன் குழந்தைகளைப் போல் பாவித்து அவர்களுக்குக் கல்வி

யுடன் ஒழுக்கமும் கற்பித்து வந்தார். சமய ஒழுக்கத்திலும் அன்பிலும் சிறந்த சுவாமிகளுடைய தொடர்பினால் மாணவர்களிலும் ஆசிரியத் தோழர்களிலும் பலர் ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்துத் துறவிகளாகவும் பக்தர்களாகவும் மாறினார். கொ. வ. 1086 ௵ ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய நேர் சீடர்களில் ஒருவராகிய **ஸ்ரீமத் நிர்மலானந்த சுவாமிகள்** (துளஸி மஹராஜ்) பல அன்பர்களின் வேண்டுகோளுக்கிணங்கி பங்களூரிலிருந்து கேரளத்திற்கு எழுந்தருளினார். அன்னவருடையவும் பொதுமக்களுடையவும் ஒத்துழைப்பினால் திருவனந்தபுரம், திருவல்லா, ஹரிப்பாடு, ஒற்றப்பாலம் முதலிய இடங்களில் ஸ்ரீ ராமகிருஷ்ண மடங்கள் நிறுவப்பட்டன. ஸ்ரீமத் நிர்மலானந்த சுவாமிகளின் இவ்வித முயற்சிகளில் மிக மிகத் துணைபுரிந்தவர்களில் ஒருவராயிருந்தார் நமது **அம்பானந்த சுவாமிகள்.**

1089 ௵ புரட்டாசி மாதம் ஸ்ரீமத் நிர்மலானந்த சுவாமிகளுடன் கல்கத்தா சென்று பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய வாழ்க்கைத் துணையாகிய **ஸ்ரீ ஸாரதா தேவி**யாரிடமிருந்து மந்திரோபதேசம் பெற்றார். இவரது பக்தி பரவசத்தையும் உள்ளத் தூய்மையையும் கண்டு அன்னையார் மனங்கசிந்து வாழ்த்தினார். அவ்வேளை கங்கைநீரால் அன்னையாரின் பாத கமலங்களைக் கழுவி, அந்தத் தீர்த்தத்தை வேறு ஜலத்துடன் சேர்த்து தன் வாணாள் முழுவதும், சுமார் 37 வருடங்களாகக் காலை மாலை பருகி வந்ததோடு, அதைத் தனது சீடர்களுக்கும் அன்பர்களுக்கும் மிக்க பய பக்தியுடன் கொடுத்தும் வந்தார். அன்னையாரிடம் பக்தியும் பரிசுத்தியும் வேண்டிப் பெற்று அன்பர்களுக்கெல்லாம் வாரி வழங்கினார்.

ஆசிரியத் தொழிலிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் 1110 ௵ (1935) ஸ்ரீமத் நிர்மலானந்த சுவாமிகளிடமிருந்து ஸன்யாஸதீக்ஷை பெற்றார். 1115 ௵ வெள்ளிமலை என்ற புண்ணிய ஸ்தலத்தில் **ஸ்ரீ விவேகானந்த மந்திர்** என்ற ஒரு ஆசிரமம் நிறுவினார். அங்கிருந்து தவஞ் செய்து கொண்டு எண்ணற்ற அன்பர்களுக்கு ஆன்ம ஞானோபதேசம் அளித்து வந்தார். இவர்களுக்குத் துறவிச் சீடர்களும் பலருண்டு.

வெள்ளிமலையிலிருந்து கன்யாகுமரி ஜில்லாவின் வடபகுதியிலிருக்கும் கடுக்கரை என்ற ஊருக்கு அடிக்கடி போய் வருவது வழக்கம். 1126 சித்திரை மாதம் 19-உ கடுக்கரையில் வைத்துத் திடீரெனத் தற்போதமிழந்தார். 23-உ காலை 5 மணிக்கு ஜகதம்பிகையின் திருவடி நிழலை அடைந்தார். சுவாமிகள் தற்போதமிழந்து கிடந்த நான்கு நாட்களும் இரவு பகல் அகண்ட நாம ஜெபம் நடந்தது.

சுவாமிகளின் குண விசேடங்களைப்பற்றி எவ்வளவு வேண்டுமாயினும் எழுதிக்கொண்டு போகலாம். சுருங்கக் கூறின் அடிகள் அன்பே வடிவாய் அமைந்தவர் எனலாம். ஸ்ரீ ஸாரதா அன்னையாரையும் ஸ்ரீ ராமகிருஷ்ணரையும் நினைந்து நினைந்து "அம்மா, அம்மா" என்று அடிக்கடி அரற்றுவார். குருதேவரது கதைகளைச் சொல்லி நாக்குழறி ஏங்கி அழுவார். ஸ்ரீ விவேகானந்தர் முதலியோரின் நூல்கள் வாசிக்கும்போது கண்ணீர் அருவிபோல் பாயும். தனக்கு இறைவனோடு இரண்டறக் கலக்கும் முத்தி வேண்டாமென்றும், பிறவிகள் தோறும் ஆண்டான் அடிமையாக இருந்து பத்தி பண்ணினல் போதுமென்றும் அடிக்கடி கூறுவர்.

"கூடும் அன்பினிற் கும்பிடலே அன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினர்"

என்ற அருண்மொழிக்கு இலக்காயிருந்தார். மலையாள மொழியில் இவர்கள் எழுதிய பல பாடல்களிலும் இக்கருத்து நிறையக் காணலாம்.

எல்லோரிடமும் பெற்ற தாயைப்போன்ற அன்பு காட்டி வந்தமையால் பலர் இவர்களை "அம்மா" என்றும் "அன்பானந்த சுவாமிகள்" என்றும் அழைத்து வந்தனர். ஆண்டவனிடம் எப்போதும் இவர்கள் செய்து வந்த பிரார்த்தனை

"குருதேவா காளீ! ஜகதம்பே காளீ!
நர-ராமகிருஷ்ண சிவ சக்தி!
சுகமும் சாந்தியும் பரமா னந்தமும்
சகல ஜீவிக்கும் அருளு வாய்"

என்பதாகும். மணிக்கணக்காக இந்தப் பிரார்த்தனையைச்

சொல்லி உருகுவார். ஸ்ரீ விவேகானந்தர் சொல்லியபடி

"தாயினும் கனிந்த உள்ளம்
தளர்விலாத் தீர வீரம்
தீயினைப் போன்ற தூய்மை
தென்றலைப் போன்ற தண்மை"

("The Mother's heart, the hero's will
The Sweetness of the southern breeze
The sacred charm that dwell
On Aryan altars, flaming free")

சுவாமிகளுக்குச் சொந்தக் குணங்களாயிருந்தன. சாமான்களைக் கையாளுவதிலும், கடமைகளை நிறைவேற்றுவதிலும் ஒழுங்கு உலையா ஊக்கம், மாரிபோல் வண்மை, பூமிபோல் பொறுமை, பணிவு முதலிய நற்பண்புகள் இவர்கள்பால் மிளிர்ந்தன. சுவாமிகளின் கையெழுத்து அச்செழுத்தை நாணச்செய்யும் தன்மையது. இந்த சற்குருநாதரது கருணையால் எல்லோரும் இச்சீரிய குணங்கள் பெற்று இனிது வாழ்வாராக!

"பிறர்நல மெய்தத் தன்னலம் நீத்த
பெரியவ னே! யென் குருவே
பிறர்களி கண்டு தான்களி கூரும்
பேரரு ளாய்! என் குருவே
இறையவ னாகி எங்கும் நிறைவது
அன்பே என்றனை குருவே
பிறர்தாம் என்னும் பேதம் விட்டுயர்
போதம் பெற்றனை குருவே!"

"அன்பினிற் பெரியவன் அன்னைசீர் சாரதா
அன்பினுக் குரியவன் அன்பருக் கெளியவன்
அன்பினில் அனைத்தெனுக் கருளமு தீந்தவன்
அன்பெனும் இன்பவன் அம்பா னந்தனே."

# வாழ்வில் வெற்றி பெறும் வழி!

## ஸ்ரீ சுவாமி சிவானந்த சரஸ்வதி அவர்களின் 74-வது பிறந்த தின நற்செய்தி!

உலகாயத வாழ்வில் மூழ்கியுள்ள ஒவ்வொரு மனிதனுடையவும் கடைசி எண்ணத்தை அவன் மரிக்கும் நேரத்தில் பதிய வைத்துத் தெரிவிக்கவல்ல ஏதாவதொரு கருவி இருக்குமேயானுல் அவ்வெண்ணத்தின் ஒருமைப்பாட்டைக் கண்டு நீங்கள் பிரமித்துப்போவீர்கள்! "ஐயய்யோ?" நிழலின் பின்சென்று நான் வாழ்க்கையை வீணுக்கினேனே! காலத்தின் நூறில் ஒரு பகுதியையாவது பொருளைப் பின்பற்றித் தெரிந்துகொள்ளச் செலவு செய்திருந்தால், இப்பொழுது என் பாதை பிரகாசமாக இருப்பதைக் கண்டிருப்பேனே!, என்று அனைவரும் எண்ணுகின்றனர்!

உலகாயத வாதத்தைப்பற்றி ஜாக்கிரதையாக இருங்கள். அதற்கு உங்கள் இதயத்தில் இடம் கொடுத்துவிடாதீர்கள். விழிப்புடன் பார்த்துக்கொண்டிருங்கள். பணத்தைப்பற்றி பெருமையாகப் பேசியவர்கள் அதன் கீழ் நசுக்கப்பட்டு நிற்கின்றனர். உலக இன்பத்தை நாடியவர்கள் துன்பத்தில் சிக்கிப் பரிதவிக்கின்றனர். இது அவர்களுடைய குற்றமல்ல! புலப்பொருளின் இயற்கையே அதுதான். எனவே ஜாக்கிரதையாக இருங்கள். உலகாயத வாதத்திலிருந்து உறுதியுடன் வெளிவந்து விடுங்கள். வாருங்கள்! அழியாத ஞானத்தை அனுபவித்து நிற்கும் ஆத்மீகப் பெருமக்களின் பெருமை மிகும் குழாமில் சேருங்கள்!!

ஞானம் எனும் மாளிகையின் வாசலில் சாந்தி, நிறைவு எனும் இரு காவலர்கள் உங்களை வரவேற்கக் காத்திருக்கிறார்கள். உண்மை அறிவினுல் அந்த மாளிகை நன்கு பிரகாசப்

படுத்தப்பட்டு விளங்குவதைக் காணலாம். உங்கள் பளுவும் குறைகிறது. உங்கள் சிக்கல்களை ஞானம் இல்லாதாக்குகிறது. வாழ்க்கையின் தொடக்கத்தையும், அர்த்தத்தையும், லட்சியத்தையும் நீங்கள் அறிவீர்கள். இவ்வறிவு புத்தகங்களிலிருந்து பெற்ற அறிவிற்கு மாறுபட்டது. ஞான மாளிகையில் அறிவும், அனுபவமும் ஒரேமாதிரியானவை. இம்முறையே அறிகின்றவன் துன்பத்திற்கும் மயக்கத்திற்கும் அப்பால் செல்கிறான். அவன் நித்திய சூரியன் பிரகாசிக்கும் இடத்தில் இருப்பதோடு, நோவு, அறியாமை, காம விகாரம், ஆணவம் பிறப்பிறப்பு இவைகளுக்கு அப்பால் சென்று விடுகிறான்.

இந்த மாளிகையின் ஜன்னல்கள் வழியே, உலகாயத வாதமெனும் திரையால் அந்தகர்களாகித் துன்பமெனும் சகதிக்குழியில் விழுந்து தத்தளிக்கும் மக்களை நீங்கள் காண்பீர்கள். இப்பொழுது அவர்களை மாளிகைக்குள் அழைப்பது உங்கள் தவணை; நீங்கள் அனுபவிக்கும் ஞானம், பிரகாசம், இன்பம் இவற்றை அவர்களுடன் பகுத்துப் பருகுவது உங்கள் வேலை!

உலகியல் செழிப்பு அல்லது வறுமையின் தீய விளைவுகளைத் தீர்த்துக் கட்டுவதற்குத் தேவையான வழி முறைகள் தேவையானவையல்ல என்று கருத முடியாது. மக்கள் நலனுக்குப் பொருள் அவசியம் ஆத்மீக நலனுக்கு உலைவைக்கும் உலகியல் இன்ப நுகர்ச்சி வேட்கைதான் வெறுக்கப்பட வேண்டியது. மனிதனிடமுள்ள ஒழுக்கமேம்பாட்டை அழித்து விடுவதனல் ஒரு கோட்பாடென்ற முறையில் உலகாயதம் மோசமானது. உணவினுல் மட்டும் மனிதன் உயிர்வாழ முடியாது. ஆத்மீகப் பசி என்று கூறும் மற்றொன்றும் உளது.

உலகாயத, சமய மதிப்புக்களின் புனர்கணக்கீடுதான் மனித சமுதாயத்தின் தேவை. மனிதனின் ஒழுக்க நலனுக்கு எதிராக உலகாயத விஷயங்கள் செல்லக் கூடாதென்பது போன்று அவனுடைய செல்வ நலனும் சமய நலன்களுக்கெதிராக அமைவது கூடாது. மந்தமான, இயந்திர ரீதியிலமையும் மதச் சடங்குகள் அல்லது சமய சம்பிரதாயங்கள் மூலம் சமய,

ஆத்மீக நன்மதிப்புக்கள் அபிவிருத்தி செய்யப்படுவதில்லை. ஆனால், வாழ்க்கையெனும் பள்ளிக்கூடத்தில் ஒழுக்க—நன்னடத்தையின் மூலமும் சுயக்கட்டுப்பாட்டின் மூலமும் அவை அபிவிருத்தி அடைகின்றன. பெறும் பேறுகளை ஆக்குவதும் ஆத்மீகத்தை வளர்ப்பதும் ஒழுக்கமேயாகும். அதின்றி உலகாயதமே ஓங்கி நிற்கும்.

வாழ்க்கை எனும் சிறு செடி சக்தி நிறைந்ததாக இருக்கிறது. அதை நன்கு கவனித்தால், அது பெரு மரமாக வளர்ந்து நிழலையும் பலனையும் தரும். உலகெங்கிலுமுள்ள இளைஞர்கள் ஆத்மீக ரீதியில் பட்டினி கிடக்கின்றனர். மனித சமுதாயத்தின் இருப்பை உலகாயத வாதத்தின் விஷமானது கெடுத்துக்கொண்டு வருகிறது. நிவாரணத்தை விரைவிலேயே கண்டுபிடியுங்கள். ஒழுக்க, ஆத்மீக நன்மதிப்புக்களை இளைஞர்களிடம் போதியுங்கள். நல்லறிவையும், உண்மை, அகிம்சை, தூய்மையெனும் கோட்பாடுகளையும் அவர்களிடம் ஊட்டுங்கள். இளைஞர்கள் நேர்மையெனும் பாதையில் செலுத்தப்படட்டும். இதுவே மிகச் சிறந்த தேச அபிவிருத்தித் திட்டமாகும். இதுவே நாட்டுக்கும் மனித சமுதாயத்திற்கும் நாம் செய்யும் மிகச் சிறந்த சேவையாகும்.

உங்கள் அனைவரையும் ஆண்டவன் அனுக்கிரகிப்பாராக! அனைவரும் தெய்வீக வாழ்க்கையில் நின்று, சாந்தியும் நல்லெண்ணமும் நிலவும் காலத்தை தோற்றுவிப்பீர்களாக!


## யோக சமாஜம் - சென்னை-20

கவியோகி மகரிஷி சுத்தானந்த பாரதியார் கலையும் தவமுமாக வாழும் யோக சமாஜத்தில் யோக வைத்திய சாலையும், யோகி அச்சகமும் நாட்டி அரிய தொண்டுகள் நடக்கின்றன. இங்கேயே மூலிகை மருந்துகள் செய்து வைத்தியசாலையில் வழங்குகின்றார்கள். சுத்தானந்தரின் நூல்களையெல்லாம் யோகி அச்சகம் வெளியிடுகின்றது. மாதம் இரண்டு நூல்கள் வருகின்றன. வேண்டுவோர்

**மனேஜர், யோகி அச்சகம்,**
யோக சமாஜம்,
அடையாறு, சென்னை-20.

என்ற விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்க.

# சுத்தானந்தரின் கடிதங்கள்-5

நாமக்கல்.

**அன்புள்ள நண்பரே!**

நான் எனது சாரணர் சிலருடன் கொல்லிமலைக்குச் செல்கிறேன். இன்று, இங்கே ஓர் இஸ்லாம் நண்பர் எங்களை உபசரித்தார்.

வேலூர் பயிற்சி, மிக்க மகிழ்ச்சியளித்தது. 1917-ல் பெஸண்டும் பியர்ஸனும் தொடங்கிய சாரண இயக்கத்திலேயே நான் உற்சாகங்கொண்டேன். பசுமலையில் பேடன்பௌல் முறைப்படி பயிற்சி பெற்றேன். ஆனாலும், வேலூரில் மிஸ்டர் மெண்டிஸ் தந்த பயிற்சிதான் நிறைவாயிருந்தது. அந்தப் பத்து நாட்களையும் நான் மறக்க முடியாது. பல ஜில்லாக்களிலிருந்தும் அங்கே கூடிய அரிய நண்பர்களையும் மறக்க முடியாது. இந்தச் சாரண வட்டமே உலக வட்டமாகப் பரவிவிட்டால், மானிட வாழ்வு எவ்வளவு இன்பமளிக்கும்! "சாரணீயம்" என்பது நம் நாட்டிற்குப் புதிதன்று. தமிழர் போர்களிலும், பாரதப் போரிலும் சாரணர் இருந்தனர். ஆனால் எல்லாம் 'இருந்தனர்' கதைதான்! இன்று உருப்படியாக இருப்பதை நாம் பயன்படுத்த வேண்டும். நமது மாணவர் அனைவரும் சாரணராக வேண்டும்.

நான் காட்டுப்புத்தூரிலும், அதைச்சார்ந்த இரண்டு கிராமங்களிலும் சாரணப்படை சேர்த்து நடத்துகிறேன். மாணவர் மிகவும் உற்சாகமாகப் பயிற்சி பெறுகிறார்கள். முடிச்சுகள், குழலோசை, கொடிக்குறி, வழிக்குறி, வழிநடை, கோற் பயிற்சி, முதற் சிகிச்சை, பாடி வாழ்க்கை (Camp Life) சாரண விளையாட்டுகள் — எல்லாம் அவர்களுக்குத் தெரியும். ஆனால் இவற்றுடன் நான் நிற்கவில்லை.

சாரணர் சட்டை போட்டு விறைப்பாக நடந்தால்மட்டும் போதாது; இடுப்பு வளைந்து சமுதாயப்பணி செய்ய வேண்டும்.

நமது மொழி, நமது நாடு, நமது சமயவுணர்ச்சி யில்லாத இயக்கம் அதிகப் பயனளிக்காது. ஆதலால், என் சாரணப்படையில் சில புதுமைகளைப் புகுத்தியிருக்கிறேன். தாங்களும் அவ்வாறு செய்வதானால் விரிவாக விபரம் எழுதலாம்; அல்லது தாங்கள் இங்கே வந்து நேரே அறிந்து செல்லலாம். (1) சாரணருக்குத் திருக்குறளையே பொதுமறையாகச் செய்து பாடஞ் சொல்லுதல்; (2) சாரணப் பயிற்சிக்குரிய கட்டளைச் சொற்களை நில், இரு, வலம், இடம். செல், ஓடு, வா, போ, வளை, பற்று, தாக்கு, வட்டம், அரைவட்டம், தயார், ஒழுங்கு... என்று தமிழிலேயே எளிதாகச் சொல்லி வருகிறேன். இதனால் ஆங்கிலம் அறியாதவர்களும் இயக்கத்தில் சேர்ந்து வேலை செய்கிறார்கள். கொடிக்குறி, தந்தி யெல்லாம் இப்போது ஆங்கிலத்திற்கே; அத்துடன் தமிழுக்கும் அவ்வாறே கோடும் புள்ளியும் குறித்து என் சாரணர்களுக்குத் தமிழ்க் குறிப்பேச்சு (Tamil Signaling) கற்பித்துள்ளேன். (3) பாடித் தீயின்போது, சாரணர் நமது நாட்டு வரலாறு, உலகப் பெரியார் வரலாறு, தமிழர் வரலாற்று நிகழ்ச்சிகள்—இவற்றையே கதையாகச் சொல்லவும், ஆடல் பாடலாக விளக்கவும் செய்திருக்கிறேன். சாரணருக்கு இதனால் நாட்டுணர்ச்சியும், கலையுணர்ச்சியும், சமயவுணர்ச்சியும் பெருகும். (4) என் சாரணர் சிறப்பான நாட்களிலேதான் தமான் சட்டை போடுவர். மற்ற நாட்களில் சாதாரணமாக வேட்டி, துண்டு ஷர்ட்டுடன் தொண்டு செய்வார்கள். காலை மாலை உடம்பு சுத்தம் செய்து கொண்டு அருட்பாடல்களைப் பாடுதலும் சந்தி ஜபம் செய்தலும் சாரணர் கடமை; (5) சாரணர் சமுதாயத் தொண்டு மிகுதியாகச் செய்ய வேண்டும். இதற்காகவே அயலூரில் நான் திருக்குலத் தொண்டு நடத்துகிறேன். தீண்டாமை யென்னும் அழுக்கு ஒழியவேண்டும். சுமார் 250 திருக்குலத்தார் என்னைச் சுற்றியிருக்கிறார்கள். அவர்களுக்கு இனிய பாடல்களாலும் பேச்சாலும் ஜாதிமத சமத்துவமும், தூயவாழ்வும், மனித தர்மமும் உணர்த்தியுள்ளேன். அதன் பயனாக அவர்கள் சுத்தமாக இருக்கிறார்கள்; குளித்து, உவர்மண்ணால் வேட்டி வெளுத்து, திருநீறு பூசி, பஞ்சாட்சரி ஜபித்து, பஜனை செய்கிறார்கள். கள்ளுச்சனி ஒழிந்தது. முன்னே 'கள்' என்றால் 'மொள்' என்று சொன்னவர்!

இப்போது 'சள்' என்று விழுகிறார்கள்! இப்போது திருக்குலச் சிறுவருக்குப் பள்ளிக்கூடம் வைத்திருக்கிறேன். மண் சுவர் எடுத்துக் கூரை வேய்ந்து, சேரியன்பரே பள்ளிக்கூடம் அமைத்தனர். நாட்டாமைக்காரர் சேர்ந்து ஒரு உபாத்தியாயரை வைத்து நந்தன்பள்ளிக்கூடத்தை நன்றாக நடத்த முனைந்திருக்கிறார்கள். புக்கர் வாஷிங்டன் கதை அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இதற்கெல்லாம் எதிர்ப்பும் பலமாக இருக்கிறது. சில பணக்காரரும் பண்ணைக்காரரும் பாமர மக்களைப் பரம்பரை அடிமைகளாக்கவே நடத்துகின்றனர். 'சீர்திருத்தம், ஊர்திருத்தம்' என்றால், "யாரடா நீ, எங்கள் அடிமைகளைக் கட்டவிழ்ப்பவன்?" என்று பாய்கிறார்கள். என்னை அரசியல் புரட்சிக்காரன் என்று சர்க்காருக்குப் பொய்யறிக்கை எழுதிவிட்டிருக்கிறார்கள். எத்தனையோ வசவு, இழிவு, இடர்!

ஆனால் மனச்சாட்சி மகிழ சத்தியங் கடைப்பிடித்து நன்மையே செய்யும் தீரர், அறியாதார் சலசலப்பை அஞ்சார். இறைவன் என்னை அத்தகைய பரோபகார தீரனாக்கட்டும்.—அன்பு.

சீலைப்பிள்ளையார் புத்தூர்,

அன்புள்ள ஸ்ரீ ராமகிருஷ்ண சாஸ்திரிகளுக்கு—, அநேக நமஸ்காரம்.

இங்கே நாம் தொடங்கிய தேசீயப் பள்ளிக்கூடம் பெரிய வீட்டுத் திண்ணையில் ஒழுங்காக நடக்கிறது. குழந்தைகள் இராட்டையில் நன்றாக நூற்கிறார்கள், எழுத்துக் கூட்டிப்படிக்கிறார்கள். எண்சுவடி ஒப்பிக்கிறார்கள். ஆத்திசூடியும், கொன்றை வேந்தனும் அவர்களுக்குத் தெரியும். நாயன்மார் கதைகள் சொல்லவேண்டும்; தக்க சமயத்தில் தொடங்குவோம்.

நிற்க, ஸ்ரீராமஜெயந்தி சென்ற வருஷம் போலவே இவ் வருஷமும் சிறப்பாக நடக்க வேண்டும். பக்தி பரவசப் பாடல்களைப் பாடி நர்த்தனம் செய்ய என் கால்கள் துள்ளுகின்றன. பஜனைக்குப் பிடில் மிருதங்கம் தேவை. பஜனைக்குத் துணை

யாக நத்தம் பாகவதரை அழைக்க வேண்டும். கைங்கர்யத்தில் ஈடுபட்ட நண்பர் சாப்பிடவும், கடைசி இரண்டு நாட்களில் எல்லாருக்கும் (குடியானவர்களுக்கும்) சமாராதனை செய்யவும் முன்போலவே தினம் உஞ்சவ்ருத்தி யெடுக்க நான் தயார். சமாராதனை தங்கள் வீட்டிலேதான் நடக்க வேண்டும். தீக்ஷிதர், பிச்சுவையர் முதலியோரும் 'ஸ்ரீ ராமஜெயம்" என்று கச்சைகட்டி முன்வந்திருக்கிறார்கள்.

இந்த வருஷம் ஸ்ரீ ராமகிருஷ்ண லீலைகளுடன், நமது சன்மார்க்கத்தை விளக்கும் பாடல்களும் பஜனையுடன் சேர வேண்டும். தேசம், ஆதாரம்; தெய்வ பக்தி ஆதேயம். தெய்வம், தேசம், பாஷை ஆகிய மூன்றிற்கும் நாம் கைங்கரியம் செய்ய வேண்டும். தங்கள் அன்பான பதிலை எதிர்நோக்கும்.- பொதுநலவூழியன்.

சோமூர்,

அன்புப் பிள்ளைக்கு—,

தொண்டர்நாதன் நலம் அருளுக! நமது தமிழர் சங்கம் மேன்மேலும் வளர்க! சிலைப்பிள்ளையார் புத்தூர் வேளாளரின் தமிழுணர்ச்சி வாழ்க! தேசிகர், பெரிய புராணம் முத்துப்புலவர், கோவிந்தசாமிப் புலவர் அனைவருக்கும் சங்க நடப்பில் ஊக்கம் மிகுதி. வேளாளர் கொழு முனையிலேதான் சமுதாயம் செழுமை யடைகிறது; அவர்கள் வண்மையினலேதான் தமிழும் செழிக்க வேண்டும். நமது நாட்டின் பெரும்பாலார் வேளாளர்; சோழ பாண்டியர் வேளாளர், கம்பரும், வள்ளுவரும், புகழேந்தியும், அப்பரும் வேளாளர். வேளாண்மை தாளாண்மை; உழைத்திட்டல், அறவழி உதவல், இரண்டும் அன்புமயமான தமிழர் நாகரிகத்தின் இதயத்துடிப்புகளாகும். வேளாண்மை செய்யும் நீங்கள் நமது தமிழ்த்தாய்க்கு ஒவ்வொரு கலம் நெல் தருவதென்றால், அவளுக்கு இனிப் பஞ்சமேது? தக்க புலவர்களை வரவழைத்துப் போற்ற வேண்டும்; தேவார - திருவாசக - அருட்பா - இசையரங்கு நடக்க வேண்டும்; கூட்டத்தன்று கன்னையாவின் மங்கள வாத்தியம் இனி

மையாக முழங்க வேண்டும்; பயனுள்ள சில துண்டுப் பிரசுரங்களைக் கரூர் நண்பர் அச்சகத்தில் அடித்துக் கூட்டத்தில் படித்து வழங்க வேண்டும். நடராஜப் பெருமான் வழிபாடு நடக்க வேண்டும்; அடியார் பெருமையை இசைப் பாட்டுடன் கதை செய்ய வேண்டும். இவற்றிற்காகவே நாம் ஒரு முதல் சேர்த்து வட்டியிலிருந்து செலவு செய்ய வேண்டும். தமிழ், வேதாகம விளக்கம் இரண்டிற்கும் நாம் தொண்டு செய்வோம். தமிழர் நாகரிகம், இன்று நமது நிலை, தமிழர் செல்வம், நாமும் மனிதர், நாமார்க்குங் குடியல்லோம், சங்கத்தமிழர், நமது சமயம், சிவம் என்றால் என்ன? பொது நெறிச் சைவம், சைவம் உலகசமயம், தேவாரத்திருமறை, திருவாசகத்தேன், சமயப் பெரியார், தமிழரின் அருளுணர்ச்சி, சரியை கிரியை யோக ஞான சாதனங்கள், தாயுமாணவர் உபநிஷத்துக்கள், வள்ளுவர் உள்ளம், திருக்குறளின்பம், அருட்பா விளக்கம் முதலியவற்றைக் குறித்து வரிசையாகப் பேச நான் குறிப்புகள் எழுதி வைத்திருக்கிறேன். இங்கே கதர்ப்பணிக்காக வந்தேன். சோமூர்ப்பிள்ளை அன்புடன் உபசரித்தார். கூட்டம் நடந்தது. அன்பு, அறிவு, அருட்சணி, இந்த மூன்று அகரங்களும் சேர்ந்தால் நாம் வெற்றிச் சிகரத்தில் ஏறுவோம். பேச்சுடன், படிப்புடன் நில்லாமல், கற்றவழி நின்று அனுபவங் காணவேண்டும். பைபிளைக் கொண்டு பாதிரிமார் ஊருக்கூர் பிரசாரம் செய்வது போல், நாமும் மக்களைக் கூட்டி நமது சமய ஞானத்தை பிரசாரஞ் செய்ய வேண்டும். திருவிழாக்களில் சிவகோஷம் செய்வோம். சிவபெருமான் நமது வினைத் திட்பத்திற்கேற்ற மனத் திட்பம் அருளுக. அன்பே சிவம்.

---

*நம்மேல் அன்பு இல்லாதவர்கள் மேலும், நாம் அன்பு உள்ளவர்களாயே இருத்தல் வேண்டும்.*

*பிறர் உனக்குச்செய்த குற்றங்களினாலே உனக்குக்கோபம் தோன்றும் பொழுது, நீ பிறருக்குச் செய்த குற்றங்களை நினைப்பாயாகில், அது அடங்கிவிடும்.*

(நாவலர்)

# எனது யப்பான் தேசத்து அனுபவங்கள்.

யான் யப்பானில் ஏறக்குறைய இரண்டு மாசங்களாகச் சுற்றுப்பிரயாணஞ் செய்தது சமய ஆராய்ச்சித் தொடர்பில் என்பதையும், எனவே எனது பிரயாணக் குறிப்புகள் பெரும்பாலானவை, அந்நாட்டுப் பழைய நாகரிகம், கலாச்சாரம், சமயம் ஆகிய மூன்றையும் பற்றியே என்பதையும் முதல் பேச்சில் கூறியுள்ளேன். அந்த நாட்டின் நாலாபக்கங்களிலும் பரவியுள்ள கோயில்கள், ஆலயங்கள், துறவிகளின் அறநிலையங்கள், பலவற்றைத் தரிசித்து மகிழ்ச்சியடைந்ததோடு, அவற்றின் பழம் பெருமை, வழிபாட்டு முறைகள் குறித்து ஆங்காங்கு பேசப்பட்ட பிரசங்கங்களைக்கேட்டின்புறும் அரிய சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. ஓர் சமய மகாநாட்டின் பிரதிநிதியாகச் சென்றிராமல், தனி முறையில் யான் பிரயாணஞ் செய்திருப்பின் இந்த வசதிகளுட்பல எனக்கு வாய்த்திருக்கவேமாட்டாது.

யப்பானிய மக்களின் பண்பாட்டைப் பற்றிப் பேசும்போது, அவர்களிடம் சாதாரணமாக எவரும் காணக்கூடிய மூன்று குணங்களை முதலில் குறிப்பிட விரும்புகிறேன். அவை யாவன :- (1) இயற்கை வனப்பில் அவர்களுக்குள்ள அளவற்ற பாசம்; (2) கலை வேட்கை; (3) கல்வியில் ஆர்வம். அரசியல் நிலையிலும் சமுதாய வாழ்க்கையில் பிற நாகரிக கலப்பால் ஏற்பட்ட எத்தனையோ மாறுதல்களுக் கிடையிலும், குறித்த மூன்று குணங்களும் தொன்றுதொட்டு இன்றுவரைக்கும் மாறுமல் நிலைபெற்றுள்ளன வெனலாம். இதற்கு மூலவேராக அமைந்துள்ளது அந்நாட்டுச் சமயக் கொள்கைகளேயாம். புராதன சமயமான ஷின்ரோ மதம் மக்களின் உள்ளத்தில் இயற்கைமீது அளவற்ற காதலைப் பதியச்செய்துள்ளது; அதன்பின் வந்த பௌத்த மதம் கலை வேட்கையைத் தூண்டி

யுள்ளது; மூன்றாவதாக, கல்வி மீதுள்ள அவர்களது மோகம் சீனாவிலிருந்து சென்ற கொன்பியூசியம் அளித்த நன்கொடை யாகும். இதனை நன்றியுடன் பாராட்டும் முறையில் சீனப் பேராசிரியர்கள் 32 பேர்களின் உருவங்கள் பழைய தலைநக ரான கியோற்றாவின் அரச மாளிகையின் முடிசூட்டு மண்டபத் தின் சுவரில் வரையப்பட்டுள்ளன. முன்னாளில் விவசாயம், பொருளாதாரம், நீதி சாஸ்திரம் முதலியவற்றை சீனரிடமி ருந்து எவ்வளவு ஆர்வத்துடன் கற்றார்களோ, அதே ஆர்வத் துடன் பின்னாளில் மேனாட்டாரிடமிருந்து விஞ்ஞானம், இயந்தி ரக் கலை முதலியவற்றைக் கற்றுத் தேர்ந்துள்ளனர். அம் மட்டோ! அத்துறையில் தங்கள் ஆசிரியர்களே பின்வாங்கக் கூடிய முறையில் சிறப்படைந்துள்ளனர்!

சமயத் துறையில் யப்பானிய மக்களிடத்தே காணக்கிடக் கும் விரிந்த மனப்பான்மையும், பரந்த உள்ளமும், சகிப்புத் தன்மையும் வியக்கத்தக்கவை. எதுவித சமயப் பூசலுக்கும் அணுவேனும் இடந்தரா முறையில் வாழ்கிறார்கள். இயற்கை அன்னையின் உன்னத அழகு அரசுபுரியும் நிக்கோ என்னும் இடத்தில் நடந்த கிறிஸ்தவ மகாநாடு ஒன்றுக்கு என்னை அமெ ரிக்க அன்பர்கள் சிலர் அழைத்துச் சென்றனர். அம்மகாநாட் டில் கலந்துகொள்ள இருபத்தொரு தேசங்களிலிருந்து கிறிஸ் தவப் பிரதிநிதிகள் குழுமியிருந்தனர். அக்கூட்டத்தில் யான் ஒருவனே அம்மதத்தைச் சேராதவன். அந்த மகாநாட்டின் முக்கிய பேச்சாளராக நியமனம் பெற்றவர் யப்பானில் பிர சித்திபெற்ற கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்து, லண்டன், சிக் காக்கோ முதலாய சர்வகலாசாலைகளில் பயின்று பட்டதாரி யாகி இன்று ரொக்கியோவில் பேராசிரியராகத் தொண்டாற் றுபவர். அவர் தமது பிரசங்கத்தின் முன்னுரையில் கூறிய ஓர் வசனம் சபையினர்க்கு எதிர்பாராத வியப்பைக் கொடுத்தது; சிலர் திகைப்படைந்தனர். **“நான் கருமத்தில் ஷின்ரோ மதக் கொள்கையினன்; கருத்தில் பௌத்தமதச் சார்பினன்; உணர்வில் கிறிஸ்தவன்”** இதுவே அவர் அன்று கூறிய வாக்கு. அப்படிச் சொன்னதுடன் அவர் நின்றுவிடவில்லை. யப்பானில் எந்தக் கிறிஸ்தவரை விசாரித்தாலும் அவர்கள் தனது வாக்கைப் பூர

ணமாக ஆமோதிப்பார்களென வற்புறுத்திப் பேசினர். இதில் அடங்கிய உண்மையை நேரே அறிந்துகொள்ளக்கூடிய சந்தர்ப்பமும் பல யப்பானிய கிறிஸ்தவக் குடும்பங்களோடு ஏற்பட்ட உறவால் எனக்கு எளிதில் கிடைத்துவிட்டது. கிறிஸ்தவ மிஷனரிமார் ஏறக்குறைய நானூறு வருஷங்களாக கோடிக் கணக்கான பணத்தைச் செலவிட்டு ஆயிரக்கணக்கான கோயில்களைக் கட்டியும் பதினயிரக்கணக்கான போதகர்களை கிறிஸ்தவ சேவைக் கனுப்பியும் ஆசியாவின் ஏனைய நாடுகளிற்போல் யப்பானில் கிறிஸ்தவ சனத்தொகை அதிகரிக்காமல் இருப்பதற்குக் காரணம் இதுவேயாம். அந்நாட்டின் மக்கள் சமயத்துறையில் ஒரு குறித்த கோட்பாடுதான் உண்மையென்றும் ஏனையவையெல்லாம் பொய்யென்றும் கருதவே மாட்டார்கள். சமரசம் அவர்களது இரத்தத்தில் ஊறிவிட்டது. இதற்கு அரண்செய்யும் முறையில் அவர்கள் மொழியில் 'சமயம்' என்ன என்பதைக் குறிக்கும் 'ஷூக்கியோ' என்னும் பதமும் அமைந்துள்ளது.

இனி, அந்நாட்டின் புராதன சமயமான, ஷின்ரோவைப் பற்றிச் சிறிது விபரமாகக் கூற விரும்புகிறேன். இந்த மதமானது சரித்திர காலத்துக்கப்பால், உலகின் வெவ்வேறு தேசங்களில் பரவியிருந்த இயற்கை வழிபாட்டையும் பிறர் வழிபாட்டையும் தழுவிய ஒன்றேயாம். இந்த இயற்கை வழிபாட்டில் ஏனைய நாடுகளிற் போலவே, சூரிய வழிபாடு முக்கிய இடம்பெற்றுள்ளது. சில தினங்கட்கு முன் நத்தார் பண்டிகை மிகவும் குதூகலமாகக் கொண்டாடப்பட்டதல்லவா? அது தானும் மார்கழி மாசத்தில் நிகழும் மாரி சயன காலத்து (Winter-Soltise) டன் தொடர்புடைய சூரிய வழிபாடேயாம பண்டைக்காலத்தில் ரோமாபுரி மக்களால் டிசெம்பர் 25ந் தேதியன்று கொண்டாடப்பட்ட மித்திரன் ஜென்மவிழா பார்சிக மக்களிடமிருந்து அவர்கள் இரவல் வாங்கிய சூரிய தினமேயாம். அத்தினமே பழைய பிரித்தானிய மக்களின் வருஷப் பிறப்பு நாளாகவும் இருந்ததாகும். இன்னும் பத்து நாட்களில் இந்துக்கள் கொண்டாடவிருக்கும் பொங்கல் பண்டிகையும் அதே தொடர்பில் தோன்றிய விழாவாகும்.

யப்பானில் மாத்திரம் ஓர் வித்தியாசமுண்டு. ஏனைய நாடுகளில். இந்துக்கள் உட்பட, சூரியன் ஆண் தெய்வமாக, அதாவது பகவானாக, தேவனாக, வழிபடப்படுகின்றது. யப்பானிலோ பெண் தெய்வமாக—அவர்கள் மொழியில் அமதேரசு ஓமிக்காமியென—வழிபாடு நடைபெறுகின்றது. இப் பெயருக்கு 'ஒப்புயர்வற்ற தனிப்பெருந்தெய்வம்' என்ற பிறிதோர் கருத்துமுண்டு. வழிபாட்டு முறையில் இத்தேவதை இப்புவன முழுவதின் தாயாகவே கருதப்படுகிறாளெனலாம். யப்பானிய பழைய அரச குடும்பம் இத்தேவியின் பரம்பரையில் தோன்றியதென்ற கருத்துமுண்டு. அக்காரணம் பற்றியே இன்றைய மன்னரும் சூரிய வம்சத்தவரென அழைக்கப்படுகிறார்.

சைவமரபில் 'கோயில்' என்றால் சிதம்பரத்தைக் குறிப்பதுபோல் 'ஷின்ரோ' மதத்தில் ஆலயம் (Shrine) என்றதும் அரச குடும்பத்தினரின் சொந்தமான இசேபெரிய ஆலயம் கருதப்படுகின்றது. யப்பான் நாட்டிலுள்ள 80,000 ஷின்ரோ ஆலயங்களுக்கெல்லாம், காலத்தாலும் பரம்பரை வழக்காலும் இதுவே முதலிடம் பெற்றுள்ளது. இது 15000 ஏக்கர் விஸ்தாரமான இடத்தில் அமைந்துள்ளது. பின்பக்கத்தில் மலையும் முன் பக்கத்தில் ஆறும் அழகாய் அமைந்துள்ளன. வெளிக்கோபுர வாசலுக்கு முன்புறத்தில் ஓடும் இசுஷு-காவா என்னும் நதியின் தெளிந்த நீரில் கை, கால், முகங்களைக்கழுவிய பின்னரே யாத்திரிகர்கள் உள்ளே நடந்து செல்ல முடியும். ஆற்றின் பாலத்தைத் தாண்டி எவ்வித வாகனமும் செல்ல உத்தரவில்லை. இந்த ஆலயத்தின் கர்ப்பக்கிரக முன்னிலையில் வழிபடும் உரிமை அரசகுடும்பத்தினருக்கு மாத்திரமுண்டு. அங்கே இருபது ஆண்டுகட்கு ஒருமுறை ஆலயப் புது அமைப்பின்மேல் நடைபெறும் நீராட்டு விழாவில் தலைமைப் பூசாரியாக இருந்து கிரியை செய்யும் பொறுப்பு அரச குடும்பத்தில் பிறந்த பெண்ணுக்குண்டு. பதின்மூன்று நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்று வந்த இப்புது நீராட்டு விழா 1949-ம் ஆண்டில் நடைபெறவில்லை. ஷின்ரோ மதத்தில் பிதுர் வழிபாடும் பெரியார் வழிபாடும் பின்னுளில் வீரர் வழிபாடாக மாறி, மக்கள் மனதில் யுத்த வெறியைத் தூண்டி, இரண்டா

வது உலகப் போரில் யப்பான் பல அட்டூழியங்களைச் செய்ய நேர்ந்தது என்ற காரணங்கூறி, ஷின்ரோ ஆலயங்கட்கு அரசாங்கம் அளித்துவந்த ஆதரவும் நன்கொடையும் யப்பானை வெற்றிகொண்ட அரசுகளால் நிறுத்தப்பட்டது. இத்தடை உத்தரவு மக்களின் பழைய ஆர்வத்தைக் குறைக்கவில்லை. 1949-ம் ஆண்டில் நடைபெறத் தவறிய புது நீராட்டு விழா பொதுமக்களின் பண உதவியால் 1953-ம் ஆண்டில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

1867-ம் ஆண்டுவரைக்கும் ஷின்ரோ மதமானது நூற்றுக்கணக்கான கிளைகளாக இருந்து வந்தது. மெயிஜி ராச்சியம் ஆரம்பித்தபின், இந்தக் கிளைகளெல்லாம் பதின்மூன்று முக்கிய பிரிவுகளில் அடக்கப்பட்டு அரசாங்கத்தின் அங்கீகாரம் பெற்றன. இவற்றுள் அந்நிய மதங்களில் நம்பிக்கை வேண்டாமெனக் கண்டிப்பாக வற்புறுத்துவது சின்றி மார்க்கம் ஒன்றேயாம். ஏனையவை பெரும்பாலும் மலை வழிபாட்டைப் பெருமைப்படுத்துகின்றன. முக்கியமாக பியூஜோ மார்க்கம் அருணசல வழிபாட்டை எனக்கு நினைப்பூட்டியது. நதி வழிபாட்டைப் பிரதானமாகக் கொண்ட மார்க்கம் மிசோகி என அழைக்கப்படுகிறது.

குறித்த பதின்மூன்று பிரிவுகளைச் சேர்ந்த ஆலயங்கள் பலவற்றைத் தரிசித்துள்ளேன். அவற்றுள் என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது ரேன்றி மார்க்கத்தைச் சேர்ந்த பெரிய நிலையமும் அதைச் சுற்றி எழுந்துள்ள கல்விச் சாலைகளும் ஏனையவுமாகும். இந்த மார்க்கத்தின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்த வரலாறு அற்புதமானது; பிறமதத்தினர்க்குத்தானும் ஆர்வம் ஊட்டும் தன்மையது. இந்துக்களாகிய நமக்கு அரிய பாடங்களைக் கற்பிக்குந் தரத்தது. ஆகையால் அதை விளக்கமாகக் கூற விரும்புகிறேன்.

உலகின் அறிஞர்கள் பலர்களின் கவனத்தை இன்று ஈர்த்து நிற்கும் இப்புதிய மார்க்கம் பெண்ணொருத்தியால் ஆரம்பிக்கப்பட்டு, அப்பெண்ணின் ஆத்ம சக்தியால் ஐம்பது ஆண்டு எல்லைக்குள் உலகில் வேறெங்குங் காணமுடியாத சிறப்பை

அடைந்துள்ள தென்பதை அறிய இப்பேச்சைக் கேட்கும் தாய்மார்கள் சகோதரிகள் அளவற்ற மகிழ்ச்சி யடைவார்க ளென்பது எனது நம்பிக்கை. அம் மங்கையர்க்கரசியின் திரு நாமம் **மிக்கி நகயாமா** வென்பதாம். பத்தொன்பதாம் நூற் ருண்டு உலகுக்களித்த மேதாவிகளுள் அன்னுர் உன்னத இடம் பெறுகின்ருர். அவர் ஓர் அரிய தீர்க்கதரிசியும் இணை யற்ற இல்லற ஞானியுமாவார். எளிய கமக்காரர் வாழ்ந்த முப் பது குடிசைகளைக் கொண்டிருந்த அவரது ஜென்ம ஊர் இன்று யப்பான் முழுவதற்குமே பெருமை கொடுக்கும் அரிய நகரமாய் மிளிர்கின்றது. அவருக்குத் தெய்வக்காட்சி கிடைத் தது 1838-ம் ஆண்டிலென அறிந்தேன்.

சென்ற நூற்ருண்டில் ஷின்ரோ மதம் போதித்த மார்க்கங் கள் தவருனவை என்றும், ஐரோப்பிய வல்லரசுகளைப் பின் பற்றிப் போர்க் கருவிகளைப் பெருக்குவதால் நாட்டுக்கு நாசம் ஏற்படுமெனவும், சக்கிரவர்த்தியைத் தெய்வமாக வழிபடும் கொள்கையானது வெறியூட்டும் தேச பக்தியாய் மாறி இடரை விளைவிக்கும் எனவும் யப்பானிய அரசாங்கத்திற்கும் நாட்டுத் தலைவர்கட்கும் அம்மையார் எச்சரிக்கை கொடுத்தனர். இப் போதனைகள் காரணமாக அவர் அரசாங்கத்தின் சீற்றத்துக்கு ஆளாயினர். அவரும் அவரது சிறிய அடியார் கூட்டமும் பன் முறை சிறைவாசஞ் செய்ய நேர்ந்தது. பன்னிரண்டு ஆண்டு எல்லைக்குள் அவர் பதின்மூன்று சிறைத்தண்டனை பெற்ருர். கடைசியாகச் சிறைவாசம் செய்தபோது அவருக்கு வயசு 89 ஆகும். 115 வயசு வரைக்கும் அம்மையார் உடல்கொண்டு உலாவுவார் என நம்பியிருந்த அவரது அடியார்கள் அன்னுர் 90-ஆவது வயசில் மகா சமாதி அடைந்த காரணத்தால் மிகவும் கவலையுற்றனர். ஆனல், உண்மையில் அவரது ஆத்ம சக்தி மிகவும் அற்புதமான முறையில் பிரகாசம் பெற்றது. அவர் உடல் மறைந்து இருபத்தைந்து ஆண்டு எல்லைக்குள்ளாகும். அடக்குமுறையைக் கைவிட்டு அம்மையார் நிறுவிய அன்பு மார்க்கத்தை அரசாங்கம் அங்கீகாரம் பண்ணியது 1908-ம் ஆண்டிலாகும். அவரின் பூத உடல் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் அழகான பெரிய ஆலயம் எழும்பியுள்ளது. அத

னைச் சுற்றி மக்கள் சேவைக்காக நிறுவப்பட்ட நிலையங்கள் அளவற்றன. ஆரம்ப பாடசாலை முதல் சர்வ கலாசாலை வரைக்கும் கல்வி நிலையங்கள் பல உள்ளன. அவற்றின் சூழலில் நூல் நிலையம், நூதனசாலை, மாணவ மாணவிகளுக்கு விடுதிச்சாலைகள் தியானமண்டபங்கள் உள்ளன. வயோதிகர்கட்கும் அநாதைப் பிள்ளைகட்கும் பிரத்தியேகமான விடுதிச்சாலைகளும், நோயாளிகட்கு வைத்திய சாலையும் ஆராய்ச்சிக் கூடங்களும் நிறுவப்பட்டுள்ளன. வருஷத்தில் மூன்று தினங்களில் பெரிய விழாக்கள் நடக்கின்றன. அவற்றில் கலந்துகொள்ள லட்சக் கணக்கான மக்கள் கூடுகிறார்கள். அவர்களெல்லாம் வசதியாகத் தங்கிப்போவதற்கு, 150 விடுதிச்சாலைகள் கட்டப்பட்டுள்ளன இன்னும்பல கட்டப்படுகின்றன. "அந்தமில்லாக்கட்ட டவேலை" என்ற வசனம் அங்கு வதியும் அடியார்களின் வாயிலிருந்து அடிக்கடி வருகின்றன. அதற்கு வேண்டிய திரவியமும் வந்து குவிந்து கொண்டேயிருக்கின்றது.

அம்மையார் சாதனை மூலம் விளக்கிய போதனைப்படி, சமயசாஸ்திரம் சொல்லிக் கொடுப்பதும் தியானம் பயிற்றுவதும் சமையல்கூடப் பாத்திரங்களைக் கழுவுவதும், தோட்டத்தைச் சுத்தமாக வைப்பதும் ஆகிய எல்லாம் ஒரேவிததொண்டாகும். சேவையில் உயர்வு தாழ்வு என்பதே கிடையாது, இன்று இந்த நிலையத்தின் தலைவராக இருக்கும் பெரியாரும், அவரது மனைவியாரும் நிஷ்காமிய தொண்டிற்கு உதாரணமாக வாழ்கின்றார்கள். மாணவ மாணவிகளுடன் சேர்ந்து கட்டட வேலைக்கு அவர்கள்கல்லும்மண்ணும்சுமந்துசெல்லுங்காட்சியை என்றுங் காணலாம்.

அம்மையார் இயற்றித் தமது சொந்தக் கையெழுத்திலேயே வரைந்தளித்த 1711 அன்புப்பாடல்கள் நீண்ட கண்ணாடி அலுமாரிகளில் நூதனசாலையில் காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளன. அவற்றுள்பல

"எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறென்றறியேன் பராபரமே"

"அன்பர்பணி செய்ய எனை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்ப நிலைதா னேவந்தெய்தும் பராபரமே"

என்பவைபோன்ற தாயுமானவர் திருவாக்கை நமக்கு நினைவூட்டுந்தரத்தில் அமைந்துள்ளன. அருட்பிரகாச வள்ளலாரும் மிக்கி நகயாமா அம்மையாரும் ஒரே காலத்தவர். இருவரும் கண்டதும் விளக்கியதும் அன்புத் தெய்வத்தையே, புது உலகில் அவர்கள் இருவரும் காணவிரும்பியது, கனவு கண்டது, ஆன்மநேய ஒருமைப்பாட்டால்பிணைக்கப்பட்ட மனித சமுதாயமேயாம்.

"தாயாகித் தந்தையுமாய்த் தாங்குகின்ற தெய்வம்
தன்னை நிகரில்லாத தனித்தலைமைத் தெய்வம்
வாயார வாழ்த்துகின்றோர் மனத்தமர்ந்த தெய்வம்"

என இராமலிங்க சுவாமிகள் அருளியுள்ள தெய்வ விளக்கம் அம்மையார் வாக்கிலும் அருமையாக வந்துள்ளது. நம் இனத்தாரைப்பொறுத்தமட்டில் வள்ளலார் வாக்கு ஏட்டளவில் இன்னும் பாட்டாக இருக்கின்றது. அம்மையார் பாடல்கள் யப்பானில் அருமையான முறையில் கருமமாக மாறியுள்ளன. இவ்வளவுதான் வித்தியாசம். இரண்டாவது உலகப்போரின் இறுதிப்பகுதியில் யப்பான் தேசம் அடைந்த நஷ்டங்கள் கணக்கில. சிலபட்டணங்கள் தரைமட்டமாயின, பல ஷின்ரோ ஆலயங்களும் பௌத்த கோயில்களும் நாசமாயின. ஆனால் மிக்கி நகயாமாவின் திருப்பெயரால் எழுந்த புதிய ரென்றி நகருக்கு எதுவிதசேதமும் ஏற்படவில்லை ஆகாயத்திலிருந்து அமெரிக்க விமானங்கள் குண்டு மழையைப் பெய்துகொண்டிருந்த நெருக்கடியான நிலையிலுங்கூட, இப்புதுப்புண்ணிய ஷேத்திரத்தில் திருப்பணிவேலை வழக்கம்போல் தங்குதடையின்றி நடந்துகொண்டிருந்ததாம். அம்மையாரின் அற்புத தெய்வ சக்தியையும் அவரது அடியார்களின் பக்திவிசுவாசத்தையும் நமக்கு நினைப்பூட்ட இது வொன்றே போதிய சான்றாகும். அன்னாரின் தீர்க்கதரிசனவாக்குக்கு அரசியல்வாதிகளும் பட்டாளத் தலைவர்களும் அன்று செவிசாய்த்திருப்பின், யப்பானின் அரசியல் நிலையும் பொருளாதாரமும் இன்றுள்ள கதிக்குவந்திருக்கமாட்டா. 'கெடுகுடி சொற்கேளாது" என்ற ஆன்றோர் வாக்கிலிருந்து ஒரு வல்லரசுகூடத் தப்பிக் கொள்ளமுடியவில்லை.

ஓம்

# "உருகுதே உள்ளம் பெருகுதே கண்ணீர்"

(மாஸ்டர் கி. சுந்தரம், கோவை)

ஏ! மூட நெஞ்சமே!! நீ ஏன் இன்னமும் அஞ்ஞான இருளிலேயே உழன்று வருகிறாய்? பித்துப்பிடித்து கேவலம்; பொய்யான வாழ்விற்காக எத்துணை கண்ணீர் உகுக்கிறாய்? நிலையற்ற பணம் உன்னிடம் நிலைத்திருக்க வேண்டுமென விரும்புகிறாயா? அந்தோ! அறியாமை! நீ எத்துணை முறை தவறினாலும், பரந்தாமனை மறந்து திரிந்தாலும் அப்பரந்தாமன் உன்னை மறந்து விடுவதில்லை. தன்னையே தூற்றித்திரியும் உயிரைக் கண்டும் அனைத்துயிர்களும் நம்மையடைய வேண்டியவைதானே! அவைகள் குறைவின்றி வாழவேண்டுமே என்ற பெருங்கருணையோடு அல்லவா அப்பரந்தாமன் உனக்கு அருள்தருகிறான். அதை ஏன் மறந்து விடுகிறாய்?

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயஞ் செய்து விடல்"

என்ற பெருந்தத்துவத்தை வாயளவில் மட்டுந்தான் படித்திருக்கிறாய். ஆனால் அவன் அதை நடைமுறையிலல்லவா காட்டுகிறான். இதைக்கண்டு உனக்கு வெட்கமேற்பட வில்லையா? இன்றைய நாளில் விஞ்ஞானிகள், பூமியைப்போல் நூறுகோடி மில்லியன் கிரகங்கள் அகண்டாகார வெளியில் சுற்றிவருவதாகவும் அவை அனைத்திலும் உயிர்வாழ்க்கை இருக்கிறது எனக் கண்டு பிடித்துள்ளனர். அந்தப்பெரும் கிரகங்கங்களை படைத்தவன் யார்? அதனை ஒரே ரீதியில் சுழலச்செய்தவன் யார்? அங்கு வாழும் கோடிக்கணக்கான அல்ல அல்ல கணக்கிட்டு

கூற முடியாத ஏன் மனத்தாலே நினைக்க முடியாத அளவிற்கு நிறைந்த ஜீவன்களை வாழ்விப்பவன் யார்? ஏ! மூட நெஞ்சே, எதை எதையோ நினைப்பேன் என்கிறாயே, இதை நினைத்துப் பார், முடியுமா உன்னால்? மனத்தாலே எண்ண முடியாத வஸ்துக்களே இல்லை என்று இறுமாப்புக் கொள்கிறாயே. இதனையே எண்ண முடியாவிட்டால், ஆதிசேஷனின் தலைமுடியில் உள்ள மாணிக்கத்திற்குச் சமமாக உள்ளதானால் அதனின் விரிந்த பெரும் பாயலில் படுத்து, யோக நித்திரை புரிந்து காத்து வரும் அப்பரந்தாமன் வடிவத்தை எவ்வாறு நினைப்பாய்? அதனால் உன் நன்மைக்காக, நீ தியானிப்பதற்காக பல அவதாரங்கள் எடுத்து பாவியான உன் உடலைப்போல தானும் உடல்தாங்கி லீலைகள் புரிந்த அவனது அப்பேரருட் கருணையை என்னவென்று சொல்வது? அந்தக் கருணையை நினைத்துப் பாராது நீ என்ன செய்கிறாய்? உன்பொருட்டு அவன் எடுத்த அவதாரங்கள் உண்மையானதா, அன்றி எல்லாம் பொய்க்கதைகளா என்ற ஆராய்ச்சியிலல்லவா ஈடுபட்டுக் கொண்டிருக்கிறாய். என்னே மூடம்? அவனுடைய இந்த அவதார உருவத்தைக்கூட உன்னால் தியானம் பண்ண முடியாவிட்டால் அவனுடைய இரண்டு திருவடிகளையாவது தியானம் செய். நீ எப்படி தியானம் செய்வது, எப்படி அவனை நினைத்து பூஜிப்பது என்பதைக்கூட உனது பிரதிநிதியாகிய அர்ச்சுனனைக் கொண்டு உனககு உபதேசித்தானே அவ்வாபத் -பாந்தவன், அந்த விஸ்வரூப தரிசனத்தைக்கூட அல்லவா காட்டுகிறான். ஆஹா! என்ன பிரும்மானந்தமான நிகழ்ச்சி! நினைத்தாலே ரோமாஞ்சலி உண்டாகிறதே! அர்ச்சுனனுடைய சந்தேகத்தை சரியான முறையில் ஓரிரு வார்த்தைகளில் தீர்த்திருக்கவேண்டிய அவன் உன் பொருட்டு நிகரற்ற "பகவத்கீதை"யையன்றோ மொழிந்தான். அதை நினை. நினைத்து அழு. இறைவா! உன்னை மறக்க நினைத்தேனே. நினைத்ததென்ன, மறந்தேனே என்று இறைவனை தியானிக்க நேரமில்லை என்ற எண்ணங்கொள்ளாதே. பிரகலாதன் கூறுவது போல இறைவன்,

> "சாணிலும் உளன், தன்மையணுவினைச்சதகூறிட்ட கோணிலும் உளன்,
> மாமேருக்குன்றிலும் உளன் நீ நின்ற, தூணிலும் உளன் நீ சொன்ன
> சொல்லிலுமுளன் இத்தன்மை, காணுதி விரைவி னென்றான்.......

என்ற நிலைகளிலே இருக்கிறான்.

ஆக, சொன்ன சொல்லிலும் செய்யும் கருமத்திலும் அவனிருப்பானே யானால் நீ ஏன் உன் கருமங்களை யெல்லாம் "கிருஷ்ணார்ப்பணம்" என்று அவனுக்காக அர்ப்பணித்து அவனை நினைத்து செய்யலாகாது? கருமயோகத்தின் சூத்திரமும், கருமயோகியின் முறையும் அதுதானே. இவைகளெல்லாம் பகவான் கீதையில் காட்டிய வழிகள்தானே! அப்படியிருப்பது தெரிந்தும் ஏன் இந்தப்பொய் வாழ்வு வாழ்கிறாய்? மற்றவர்களுக்காக நீ ருத்திராட்சப்பூனை வேஷமும் போடாதே. நீ உலகில் யாரை வேண்டுமானாலும் ஏமாற்றலாம். ஆனால் உன்னைப் படைத்துக் காத்து வரும் அப்பரந்தாமனை ஏமாற்ற முடியாது. இருகைகளையும் தூக்கி நீயே சரணம் என்று, திரௌபதி துகிலுரியுங் காலத்துச் செய்தது போல் இருகைகளையும் தூக்கி பூரண திருப்தியான மனத்துடன், உனது பிராண சக்தியனைத்தையும் ஒன்று திரட்டி ஒருமுகப்படுத்தி "கிருஷ்ணா" எனப் பிரார்த்தித்தாலொழிய அவன் உனக்கு அருள்தர மாட்டான். கபடவேடம்புனைபவர்களைக்கண்டு பகவான் சிரிக்கிறான்.

மேற்கூறிய முறை கடினமாகத் தோன்றினால் மற்றொரு சுலபவழி ஒன்று உளது. "அழுதாலுன்னைப் பெறலாமே" என்று பக்தர் கூறியது போல, நிலையற்ற பொருள்களான பணம், கீர்த்தி என்பவைகளுக்காக ஏராளமாகக் கண்ணீர் விடும் நீ பகவானுக்காக, பகவானை நினைத்து கண்ணீரைவிடு. தூயதான பெருவாழ்வு பெற்ற தொண்டரடிப் பொடியாழ்வாரும் இதையே கூறுகிறார்.

"கள்வனேன் படிறு செய்திருப்பேன்
கண்டவாதிரி தந்தேனெனினும்
தெள்ளியனேன் செல்கதிக் கமைந்தேன்
சிக்கெனத் திருவருள் பெற்றேன்
உள்ளெலாம் உருகி குரல்தழுத் தொழிந்தேன்
உடம்பெலாங் கண்ண நீர் சோர
நள்ளிருளளவும் நாவரைப்பன்
நாராயணா வென்னும் நாமம்."

என்கிறார். அதுமட்டுமல்ல, அந்த உருகிய உள்ளமுடன்' பெருகிய கண்ணீருடன் இழைந்து வரும் நாராயணா வென்னும் நாமம் நம்முடைய வினைகட் கெல்லாம் நஞ்சாக அமைகிறதாம். துன்பம் தோன்றும்போது அவனை நினையுங்கள், அழையுங்கள் என்கிறார்.

"துஞ்சும் போது அழைமின்; துயர்வரின் நினைமின்
துயரிலீர் சொல்லினும் நன்றாம்
நஞ்சுதான் கண்டீர் நம்முடைய வினைக்கு
நாராயணா வென்னும் நாமம்"

இத்துணை உயரிய நிலையிருந்தும் மனித அறிவே! ஏ நெஞ்சமே! ஏன் கீழ் நோக்கிப் பார்க்கிறாய். அதோ! காலன் உன்னையணுகக் காத்திருக்கிறான். அதோ பார்! உனது பகுத்தறிவால் விஞ்ஞானத்தில் கண்டுபிடிக்கப்பட்ட நாசகார பயங்கர உற்பத்தி ஆயுதங்களும், அணுக் குண்டுகளும் உன்னை யழிக்கக் காத்துக்கொண்டிருக்கின்றன. திரும்பிப்பார், நீ செய்த பாவ வினைகள் உன்னை விழுங்க, உன்னைச்சித்திரவதை செய்ய காத்துக்கொண்டிருக்கின்றன. இனிமேலுமா இவ்வாழ்க்கை வாழப் போகிறாய். இனி உனக்கு அமைதி கிடைக்கும் என்று நினைக்கிறாயா? அந்த காரம் சூழுகிறது. இருள் கௌவுகிறது, ஓடு, ஓடு எங்கேனும் ஒளி தெரியு மிடத்திற்கு ஓடு, அதோ! ஒளி தெரிகிறது. அரும் பெரும் ஞானிகள் சுவாமி ஸ்ரீ சிவானந்தமகராஜ், ஸ்ரீ ஞானானந்தகிரி சுவாமிகள், ஸ்ரீ சின்மயானந்தமகராஜ், தென்னாட்டுச்சைதன்யர் குருமகராஜ் ஸ்ரீலஸ்ரீ அபேதானந்த மகராஜ் போன்றோர் கூடி உரையாடிக் கொண்டிருக்கின்றனர். செல், அவர்களது திருவடிகளைப் பற்றிக்கொள் உனது உடைமைகளை உடல், பொருள், ஆவி மூன்றையும் அர்ப்பணித்து அவர்களுக்குப் பணிவிடை செய், ஞானம் கிட்டும், பகவான் உன்னை ஓடி வந்து அழைத்துச்செல்வான். உறுதியான உள்ளத்தோடு, ஆணவம், கன்மம்,மாயை ஆகிய மும்மலங்களை திரிபுரமாக்கி எரித்த சிவபெருமானை நாடு. ஆடிப் பாடு. அவர் உனது மன மாசகற்றி பாசத்தை நீக்கி பசுபதியாக ஏற்பார். கோபிகைகளோடு கூடி லீலைகள் புரிந்த உள்ளங்கவர் கள்வனை கண்ணனை நினை. உனது தமோ, ரஜோ குணங்களை ஒறுத்து ஸாத்வீகத் திரையையும் கிழித்து பரப்பிரும்ம நிலைகாட்டி, கிட்டாது பேரின்ப நிலையருள்வான்.

அதோ! அருள் வள்ளலின் கருணையைக்கண்ட நீ அவ்வருள் வள்ளலையே தன்னகத்துக் கொண்ட ஸ்ரீலஸ்ரீ அபேதானந்த மகராஜைப் பார், எந்த மலரடிகளை நீ சிரமேற் தாங்க வேண்டுமோ, எதனைப்பூவிட்டு உள்ளத்தைத் தட்டாக்கி உனது உடல், பொருள், ஆவி மூன்றையும் சமர்ப்பித்து பாமாலை, பூமாலையிட்டு போற்றித் துதிக்க வேண்டுமோ, அந்தத் திருவடிகள் பாவியான நீ உய்வதற்காகக் கல்லிலும், முள்ளிலும் காட்டிலும், மேட்டிலும் 180 மைல்கள் நடந்து மதுரையிலே ஒரே நாளில், வெறும் மனத்தாலே நினைக்கக் கூடாத அளவு ஓர் மாபெரும் கோடியார்ச்சனையை ஜூன் 18 அன்று நடத்தி திருவனந்த புரத்திற்கு பாதயாத்திரை யாகவே திரும்பி இருக்கின்றது. அங்கே செல் அந்தப் பொன்னார் திருவடிகளைப் பற்றி உனதுமன மாசோடு கூடிய புழுதியை நீ உள்ளத்தை உருக்கி வடியும் கண்ணீரினால் அலம்பு. அம்மாசகன்றானால் உனது உருகிய உள்ளமும், பெருகிய கண்ணீரும் யாருக்கும் கிட்டாத, மோக்ஷ சாம்ராட்சியத்தையே சம்பாதித்துக் கொடுக்கும். நிச்சயமாகக் கிடைக்கும். அந்த மாபெரும் நிலையை யடையச்செல்! தயங்காதே! அனந்தை செல்! ஒளி வடிவாகிய, திவ்யதரிசனம் தரும் அவ்வுலகளந்த பெருமானைக்காண ஓடு!

**வாழ்க அவன் நாமம்!!! வளர்க அருணெறி!!!**

---


## சுத்த சக்தி உபாசனை

ஆசிரியர்:- **யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்.**

**கிடைக்குமிடம்:-** யோகசமாஜம், ஸ்ரீராம் நகர், அடையாறு சென்னை 20

**விலை:- ·75 நயாபைசா**

இது சுவாமிகளின் வழிபாட்டு நூலாகும். சுவாமிகளுக்கு யோகசித்தியளித்த ஆவேச நூலும் இதுவே. இதில் பல வேதாகம யோகசாதன ரகசியங்களும் தியானப்பாடல்களும் அடங்கியுள்ளன. சக்தி உபாசகர்கள் ஒவ்வொருவருக்கும் வழிகாட்டும் நூலாகும்.

---

## சிவானந்தர் கீர்த்தனை அமுதம்

இருஷிகேசம் சிவானந்தமகரிஷி அவர்களின் 74 ஆவது பிறந்தினத்தை முன்னிட்டு, தெல்லிப்பழை, மயிலிட்டி தெற்கைச்சேர்ந்த திரு. க, **பொன்னம்பலம்** அவர்களால் வெளியிடப்பெற்றது. சுவாமிகளின் சரித்திரம் பாடலாகவே அமைந்துள்ளது.

## ரிஷிகேசம் தெய்விக வாழ்க்கைச் சங்க வெள்ளி விழா நாமலிகித ஜெபம்

### செப்ரெம்பர் மாதம் முடிய உள்ள கணக்கு விபரம்.

| | |
|---|---|
| ஓகஸ்ட் மாதக்கணக்கு | 7479245 |
| கலபொட தோட்டம் | 40770 |
| மஸ்கெலியா | 39582 |
| கல்லெல்ல லோவர் கெற்றியா | 6720 |
| ஊரெழு | 13512 |
| கொத்மலி பார்க்கேபின் | 108011 |
| திரிகோணமலை | 522600 |
| மாத்தளை | 10388 |
| சண்டிலிப்பாய் | 25200 |
| சாவகச்சேரி | 3024 |
| யாழ்ப்பாணம் | 5730 |
| கண்டி | 14400 |
| காரைநகர் குருகுல இல்லம் | 196120 |
| உடுவில் | 32410 |
| மதுரை | 11359 |
| கொக்குவில் | 720 |
| கினிகத்தேனை கடவலை | 22651 |
| நாவலப்பிட்டி | 1622613 |
| கொத்மலி குயின்ஸ்பரி | 15240 |
| காலிஎல | 6401 |
| ரோட்டன் கிரிவான் எலியா | 31500 |
| பருத்தித்துறை | 17002 |
| றத்தோட்டை வேவல்மட்டை | 60080 |
| தெல்லிப்பழை—மயிலிட்டி தெற்கு | 24212 |
| கினிகத்தேனை அல்லித்தோட்டம் | 54406 |

| | |
|---|---|
| பண்டாரவளை | 1680 |
| கற்றன் | 13123 |
| இயக்கச்சி | 7100 |
| நவாலி | 9250 |
| மூதூர்—கொட்டியாபுரம் | 87322 |
| அப்புத்தளை | 4000 |
| கொழும்பு | 12454 |
| குருநாகல் | 5539 |
| கண்டி—பள்ளக்கலைத்தோட்டம் | 52512 |
| கண்டி—போகம்பரைச் சிறைச்சாலை | 117336 |
| நல்லூர்—பண்டாரக்குளம் | 15705 |
| காங்கேசன்துறை | 12600 |
| திமிலைத்தீவு | 8900 |
| மொத்தம் | 10711417 |

அரன் நாமமே சூழ்க! நாமலிகித ஜெபத்தில் பங்கு பற்றிய அன்பர்கள் யாவரும் இன்றுவரை லட்சாதிபதியாக வாழ்ந்தவர்கள். இம்மாதத்துடன் கோடீஸ்வரராகி விட்டார்கள். இருபத்தைந்து கோடி எல்லையை அடைய வேண்டும் என்பதே எமது குறிக்கோள். இறைபருளால் நிறைவேறும் என்பது நம்பிக்கை. எல்லா அன்பர்களும் சேர்ந்து இன்னும் ஆயிரக் கணக்கானவர்களைப் பங்குபெறச் செய்ய வேண்டுகின்றோம்.

Registered at the G. P. O. as a News Paper M, L. 59-300


# வாய்வு சூரணம்.

உள்ளவாய்வு முழங்கால் வாய்வு, இடுப்பு வாய்வு, மலக்கட்டு, மலபந்தம், அஜீர்ணம், கை கால் அசதி பிடிப்பு, பசியின்மை, வயிற்று வலி, பித்த மயக்கம், பித்த சூலை, புளியேப்பம், நெஞ்சுக் கருப்பு, முதலிய வாய்வு ரோகங்களை நீக்கி ஜீரண சக்திக்கும் தேகாரோக்கியத்திற்கும் மிகச் சிறந்த சூரணம்.

## உபயோகிக்கும் முறை.

இந்தச் சூரணத்தில் அரை தோலா அளவு எடுத்து அத்துடன் அரை தோலா அளவு சீனி அல்லது சர்க்கரை கலந்து ஆகாரத்துக்குமுன் உட்கொண்டு கொஞ்சம் வெந்நீர் அருந்தவும். காலை மாலை தொடர்ந்து உட்கொள்ள வேண்டும். தேகத்தை அனுசரித்து உட்கொண்டு வரும்போது அளவைக்கூட்டியும் குறைத்தும் உட்கொள்ளலாம். நெய், பால், வெண்ணெய், நிறையச் சாப்பிடலாம். வாரம் ஒரு முறை எண்ணெய் ஸ்நானம் செய்யலாம்.

மூலிகையினால் தயாரிக்கப் பெற்றது.

தபால் செலவு உட்பட டின் ஒன்று 4 ரூ 25 ச

இலங்கையில் கிடைக்குமிடம்

**ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி.**

இந்தியாவில் கிடைக்கும் இடம்:-

**சம்பு இன்டஸ்ரீஸ் சேலம் 2. (S.I.)**

மலாயாவில் கிடைக்குமிடம்;-

**மு. கணபதி அன் கம்பெனி**

66, பெல்பீல்ட் ஸ்ரீட் ஈப்போ.


---

# சந்தா நேயர்களுக்கு

ஜோதிக்கு இம்மாதத்துடன் 12-ம் ஆண்டு நிறைவுறுகின்றது. ஆதலால் சந்தா நேயர்கள் அனைவரும் நொவம்பர் மாதம் முதலாம் தேதிக்குள் தமது சந்தாப் பணங்களை அனுப்பிவைக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம். பணம் அனுப்பும்போதும் விலாச மாற்றம் செய்யும்போதும் சந்தா இலக்கத்தைத் தவறாது குறிப்பிட வேண்டுகின்றோம்.

இந்தியாவில் உள்ள அன்பர்கள் வழக்கம் போல

**R. வீரசம்பு, சம்பு இன்டஸ்ரீஸ், சேலம் 2.**

என்ற விலாசத்திற்கு அனுப்பிவைப்பதோடு

இவ்விடமும் அறியத்தருக

**ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி (சிலோன்)**

Printed & Published by Mr. N. Muthiah,
"Athmajothi" Nilayam. Nawalapitiya.
at RAJAH PRESS. Theatre Road. Nawalapitiya. (Ceylon.) 17-10-60